### சின்னாளபட்டி பேரூராட்சிப் பகுதிகளில்

# அ.தி.மு.க. - பா.ஜ.க.-த.வெ.க. கட்சியினர் கழகத்தில் இணைந்தனர்!

## அமைச்சர் ஐ. பெரியசாமி முன்னிலையில்!

திண்டுக்கல், ஜன.3-

சின்னாளபட்டி பேரூராட்சிக்குட்பட்ட மேட்டுப்பட்டி, நாகம்மன் கோவில் தெரு உட்பட பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த அ.தி.மு.க., பா.ஜ.க. மற்றும் த.வெ.க. கட்சிகளைச் சேர்ந்த சுமார் 40க்கும் மேற்பட்ட இளைஞர்கள், நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி முன்னிலையில் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர்.





இதுபோல முன்னிலைக்கோட்டை ஊராட்சியைச் சேர்ந்த த.வெ.க. கிளைச் செயலாளர் ராமர் தலைமையில் அக் கட்சியைச் சேர்ந்த 20 இளைஞர்கள் அமைச்சர் ஐ.பெரியசாமி முன்னிலையில் தங்களை கழகத்தில் இணைத்துக் கொண்டனர், கட்சியில் இணைந்த வர்களுக்கு கட்சி சின்னம் பொறித்த பொன்னாடை அணிவித்து வாழ்த்து தெரிவித்து வரவேற்றார்.

அவர்களிடம் பேசிய அமைச்சர், பல கட்சிகளைச் சேர்ந்த தொண்டர்கள்,நிர்வாகிகள் கழகத்தில் இணைகிறார்கள் என்றால் அதற்கு ஒரே காரணம் முத்தமிழ் அறிஞர் வழியில் வந்த திராவிட மாடல் நாயகர் முதல்வர் மு.க.ஸ்டாலின் மற்றும் இளைஞர்களின் எழுச்சி நாயகன் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சிறப்புமிகு திட்டங்களும், செயல்பாடுகளும்தான் காரணம். ஆத்தூர் தொகுதியைப் பொறுத்துவரை 150க்கும் மேற்பட்டோருக்கு அரசு வேலை வாய்ப்பை வழங்கி உள்ளோம்.இன்று இளைஞர்கள் அதிகளவில் கழகத்தில் இணைகிறார்கள் என்றால், அவர்களுக்கு நிச்சயம் தகுதி கேற்ப அரசு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்ற நம்பிக்கையே, அவர்களையும், கழகத்தில் இணைந்தவர்களையும், கழகம் ஒரு போதும் கைவிடாது என்றார்.

நிகழ்ச்சியின்போது ஆத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் முருகேசன், ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் கண்ணன், இலக்கிய அணி அமைப்பாளர் முருகானந்தம், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர்கள் கணேசன், வாஞ் சிநாதன், திண்டுக்கல் மாநகர பொருளாளர் சரவணன், திண்டுக்கல் கிழக்கு பகுதி செயலாளர் ராஜேந்திரகுமார், உட்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடி வடக்கு மாவட்டம் விளாத்தி குளம் சட்டமன்ற தொகுதி, ஓட்டப்பிடாரம் கிழக்கு ஒன்றியம்,பாகம் எண் : 85 மீனாட்சிபுரம் ஊராட்சியில் நடைபெற்ற "என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி" நிகழ்வில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர், தூத்துக்குடி வடக்கு மாவட்டச் செயலாளர் பெ.கீதா ஜீவன், விளாத்தி குளம் சட்டமன்ற உறுப்பினர் ஜீ.வி. மார்க்கண்டேயன் கலந்து கொண்டார்கள். நிகழ்வில் ஓட்டப்பிடாரம் ஒன்றிய செயலாளர் காசிவிஸ்வநாதன், மாவட்ட பிரதிநிதி சத்தியராஜன், வடக்கு மாவட்ட ஆதிதிராவிடர் அணி அமைப்பாளர் முத்துராஜ், எப்போதும் வென்றான் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் முத்துக்குமார், ஓட்டப்பிடாரம் கிழக்கு ஒன்றிய தேர்தல் பார்வையாளர் சோலையப்பன், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### நெல்லை கிழக்கு மாவட்டத்தில் ஜன.3 முதல் 9ஆம் தேதி வரை

# இரு பாலருக்கும் தனித்தனி விளையாட்டுப் போட்டிகள்!

## மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் அறிவிப்பு!

நெல்லை,ஜன.3-

நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க சார்பில் இன்று (03.01.2026) முதல் 09.03.2026 வரை 7 நாட்கள் கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய,நகர பேரூர் பகுதிகளில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகிறது. என நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.



அது தொடர்பாக அவர் தெரிவித்திருப்பதாவது.

நெல்லை கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர,பேரூர்,கழகச் செயலாளர்கள் வருகின்ற இன்று (03.01.2026) முதல் தொடங்கி 09.01.2026 ம் தேதி வரை (அதாவது 7 நாட்கள்) ஒன்றிய,நகர, பேரூர் கழக பகுதிகளில் கிரிக்கெட், வாலிபால், கபடி,ஓட்டப் பந்தயம், மிதி வண்டி,கோ கோ என ஆண், பெண் இருபாலருக்கும் தனி தனியாக ஒவ்வொரு பிரிவினருக் கும் குறைந்தபட்சம் தலா 3 போட்டிகள் நடத்த வேண்டுமெனவும், கலந்து கொள்ளும் அனைத்து அணிகளும் www.dravidapongal.in <http://www.dravidapongal.in> என்ற இணையதளத்தில் பதிவு செய்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு நெல்லை கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் தலைமையை ஏற்றும் சிறப்பான நிர்வாகத் திறமையை கருத்தில் கொண்டும் தென்காசி தெற்கு மாவட்ட அலுவலக கலைஞர் அறிவாலயத்தில் தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் முன்னிலையில் தென்காசி தெற்கு மாவட்டம் ஆலங்குளம் மத்திய ஒன்றியம் கருவந்தா ஊராட்சி சோலைச்சேரி கிளைக் கழகத்திலிருந்து 10 க்கும் மேற்பட்ட மாற்று கட்சி நிர்வாகிகள் கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர்.உடன் தென்காசி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் டாக்டர் கலை கதிரவன்,பொதுகுழு உறுப்பினர் இராஜேஸ்வரன், ஒன்றிய செயலாளர் சேக் முகமது உள்பட கழகத்தினர் பலர் உள்ளனர்.



தூத்துக்குடி மாவட்டம் எட்டயபுரம் வட்டம், பேரிலோவன்பட்டியில் ரூ.24.75 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் மேல்நிலை நீர் தேக்க தொட்டி கட்டுமானப் பணியினை விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ. வி.மார்கண்டேயன் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் விளாத்திகுளம் கிழக்கு ஒன்றிய செயலாளர் சின்னமாரிமுத்து, விளாத்திகுளம் பேரூர் கழகத் தேர்தல் பார்வையாளர் ராமச்சந்திரன் ஆற்றங்கரை முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சீதாராமன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

